# ஒண்டி வீரன் நினைவு சின்னம் சேதம் நடவடிக்கை எடுக்க கலெக்டரிடம் மனு

திருநெல்வேலி, செப். 4 -

நெறக்கட்டான் செவலில் ஒண்டிவீரன் நினைவு சின்னத்தை சேதப்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி ஆதித்தமிழர் பேரவையினர் கலெக்டரிடம் மனு அளித்தனர்.

இது குறித்து ஆதித்தமிழர் பேரவை மாநகர செயலாளர் வேலாயுதம் தலைமையில் பேரவையினர் கலெக்டரிடம் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

இந்திய சுதந்திர போராட்டத்திற்கு முதல் குரல் கொடுத்த ஒண்டி வீரனுக்கு கடந்த மாதம் 20ம்தேதி அவர் வாழ்ந்த நெறக்கட்டான்செவல் பச்சேரியில் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. அன்று ஆதித்தமிழர் பேரவை சார்பில் வைக்கப்பட்டிருந்த ஒண்டி வீரன் நினைவு சின்னத்திற்கு அமைச்சர் மற்றும் துணை சபாநாயகர், எம்எல்ஏ.,க்கள் உட்பட பலர் அஞ்சலி செலுத்தினர்.

இதற்கிடையே ஒண்டி வீரனின் தியாகத்தை கொச்சைப்படுத்தும் வகையில் சிலர் அவரது நினைவு சின்னத்தை சேதப்படுத்தியுள்ளனர்.

ஒண்டி வீரன் நினைவு சின்னத்தை சேதப்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் பச்சேரியில் வசிப்பவர்களுக்கும், ஒண்டி வீரன் நினைவு சின்னத்திற்கும் கூடுதல் பாதுகாப்பு அளிக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் மனுவில் கூறியுள்ளனர்.



நெறகட்டான் செவலில் உள்ள ஒண்டி வீரன் நினைவு சின்னத்தை சேதப்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி ஆதித் தமிழர் பேரவையினர் கலெக்டரிடம் மனு அளித்தனர்.

தினமலர் - 4-9-2001



நெற்கட்டும் செவலில் சுதந்திரபோராட்ட வீரர் ஒண்டிவீரன் நினைவு சின்னத்தை சேதப்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி நெல்லையில் ஆதித்தமிழர் பேரவையினர் கலெக்டரிடம் மனு கொடுக்க வந்தனர். தினகரன்

## ஆதித்தமிழர் பேரவை வலியுறுத்தல்

# ஒண்டிவீரன் நினைவு சின்னத்திற்கு பாதுகாப்பு

நெல்லை, செப். 4: ஒண்டி வீரன் நினைவு சின்னத்திற்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று ஆதிதமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஆதிதமிழர் பேரவை மாநகர செயலாளர் வேலாயுதம் உள்ளிட்டோர் கலெக்டரிடம் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது: நெற்கட்டும்செவல் பச்சேரியில் கடந்த ஆக.20ம் தேதி ஒண்டிவீரன் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. அன்று தமிழக அரசு சார்பிலும், அருந்ததியர் அமைப்புகள், அரசியல் கட்சியினரும் அஞ்சலி செலுத்தினர்.

இன்று பூலித்தேவன் குருபூஜை விழா நடப்பதால் ஒண்டிவீரன் நினைவு சின்னத்திற்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியுள்ளனர்.

தினகரன் - 4-9-2010